பேரூராட்சி அலுவலகம்,
அச்சரபாக்கம்

ந.க.எண். 256 /2021 நாள்.23.03.2022

# மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

**1998ம் ஆண்டு தமிழ்நாடு ஒறிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம்**
**(தமிழ்நாடு சட்டம் 43/1998)**

அச்சரபாக்கம் முதல்நிலை பேரூராட்சியில் 2021–2022ம் ஆண்டு 15வது நிதிக்குழு ஆணையத்தின் சுகாதார மானியத்தின் கீழ் புதியதாக சர்வே எண்.330–7, எலப்பாக்கம் சாலை பகுதியில் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்திற்குள் வட்டார சுகாதார அலகு புதியதாக அமைக்கும் பணி மேற்கொள்ள கீழ்கண்ட விவரப்படி மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 13.04.2022 புதன் கிழமை பிற்பகல் 3.00 மணி வரையில் செயல் அலுவலரால் (அ) அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்றுக்கொள்ளப்படும்.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் 13.04.2022 புதன் கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளிகள் ஏறகவோ, நிராகரிக்கவோ அல்லது வேறு தேதிக்கு மாற்றவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு. மேற்படி வேலைக்கான ஒப்பந்தப்படிவங்கள் **https://tenders.tn.gov.in** என்ற இணைய தளத்தில் இலவசமாகவும், உரிய கட்டணம் ரொக்கமாகவோ அல்லது Executive Officer, Acharapakkam Town Panchayat என்ற பெயரில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் கேட்பு காசோலை அல்லது வங்கியாளரின் காசோலையாகவோ செலுத்தி 12.04.2022 செவ்வாய் கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் வேலைக்கான முன் வைப்பு தெகையை ரொக்கமாகவோ அல்லது Executive Officer, Acharapakkam Town Panchayat என்ற பெயரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் கேட்பு காசோலை அல்லது வங்கியாளரின் காசோலையாகவோ செலுத்தி 12.04.2022 செவ்வாய் கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் செலுத்தி இரசீது பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும் ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமாக இதர நிபந்தனைகள் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் அலவலகத்தில் கேட்டு தெரிந்துகொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அதற்கு அடுத்த நாள் அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு அன்றைய தினமே திறக்கப்படும்.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | முன்வைப்பு தொகை 1% ரூ. | ஒப்பந்த புள்ளி படிவத்தின் விலை. ரூ. | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | சர்வே எண்.330–7, எலப்பாக்கம் சாலை பகுதியில் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்திற்குள் வட்டார சுகாதார அலகு புதியதாக அமைக்கும் பணி | 50,00,000/– | 50,000/– | 10,800/– | 180 நாட்கள் |

## நிபந்தனைகள்

1. தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 43/1998 மற்றும் விதிகள் 2000ம்படி ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்படும். இரண்டு உறைகள் முறையில் (Two Cover System) ஒப்பந்தப் புள்ளிகள் அளிக்கப்படவேண்டும்.

2. விநியோகஸ்தர் ஒப்பந்தப்புள்ளிக்கான விலைப்புள்ளிகள் அடங்கிய படிவத்தில் விலைப்புள்ளிகள் குறித்து மேற்படி வேலைக்கான மதிப்பீட்டில் 1% சதவீத தொகை செலுத்தப்பட்டு, தொழில்நுட்ப மதிப்பீட்டில் தேர்ச்சியடைந்து குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் மேலும் கூடுதல் 1% சதவீத டேவணித் தொகை செலுத்தியவுடன் பணி ஆணை வழங்கப்படும். பின்னர் 3%சதவீத தொகையினை பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்படும். மேலும் மேற்படி பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளி படிவங்களை **https://tenders.tn.gov.in, https://tntenders.gov.in** ஆகிய வலைத்தளங்களில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

3. ஒப்பந்தப்புள்ளி குறிப்பிட்டுள்ள கால வரையரைக்குள் மட்டும் பெற்றுக் கொள்ளப்படும் அஞ்சல்வழி மூலம் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கான கால தாமதத்திற்கு பேரூராட்சி பொறுப்பேற்க இயலாது.
4. அடித்தல் திருத்தல் உடைய ஒப்பந்தப்புள்ளிகள் முழுமையாகவும், முறையாகவும் பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள், பிணை வைப்புத் தொகையின்றி அளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நடவடிக்கை ஏதுமின்றி தள்ளுபடி செய்யப்படும். எக்காரணமும் அறிவிக்காமல் எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்ளவோ (அ) மறுக்கவோ செயல் அலுவலர் அவர்களுக்கு பூரண அதிகாரம் உண்டு.
5. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்ற ஒப்புதலுக்கு பிறகே வேலைக்கான பணி உத்தரவு வழங்கப்படும்.
6. ஒப்பந்தப்புள்ளி தகுதி அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உடன் பேரூராட்சி அலுவலகத்தில் வழங்கப்படும் மாதிரி படிவத்தில் ரூ.20/– மதிப்புள்ள அரசு முத்திரை தாளில் ஒப்பந்தம் செய்து தரவேண்டும்.
7. வேலைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிக்க தவறினால் அவர்களால் செலுத்தப்பட்டிருக்கும் வைப்புத் தொகை (DEPOSIT ) பறிமுதல் செய்யப்படுவதுடன் குறிப்பிட்ட வேலைக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதனால் ஏற்படும் சகல இழப்புகளையும் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து வசூலிக்கப்படும்.
8. வேலை செய்ய அனுமதி பெற்ற ஒப்பந்ததாரர் வேலையினை வேறு ஒருவருக்கு மறு ஒப்பந்தம் செய்வதோ அல்லது வேறு நபருக்கு மாற்றுவதோ கூடாது.
9. ஒப்பந்தப்புள்ளி வேலைகளுக்காக செலுத்தப்படும் வைப்புத் தொகை தணிக்கை முடிந்து தணிக்கைஅறிக்கையில் தடையேதும் இல்லாத பட்சத்தில் தொகை திருப்பி வழங்கப்படும்.
10. தொகைக்கு வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது.
11. பணிக்கான இறுதி பட்டியல் வழங்கும் போது பணிக்கான மதிப்பீட்டு தொகையில் ASD-3%, IT-2%, Edu.cess-4%, GST-2%, TNMWWF-1%, தொழில்வரி ஆகியவை பிடித்தம் செய்யப்படும்.
12. இதர நிபந்தனைகளை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துக் கொள்ளலாம்.
13. ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர் விற்பனை வரி செலுத்தும் TNGST, ISO 9000 மற்றும் I.S.I.தரச் சான்று பெற்றதாக இருத்தல் வேண்டும். மேலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் நேரடி விற்பனையாளருக்கான சான்று இணைக்கப்படவேண்டும். சான்று இல்லையெனில் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.
14. பொருட்கள் இந்திய தர நிர்ணயம் மற்றும் பண்முறைத்தர நிர்ணயச்சான்று பெற்று பொருட்களையே சப்ளை செய்தல் வேண்டும்.
15. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை கூட்டவோ (அ) குறைக்கவோ (அ) ஒப்பந்தப்புள்ளி தள்ளி வைக்கவோ (அ) இரத்து செய்யவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.
16. பணிகளை துவக்குவதற்கு முன்பு பணி நடைபெறும் போது, பணி முடிக்கப்பட்ட பின்பு ஒவ்வொரு நிலையிலும் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு சமர்பிக்கப்பட வேண்டும்.
17. பேரூராட்சியில் வேலைகள் தொடர்பாக அரசாணைகள், நடைமுறை விதிகள் மற்றும் பேரூராட்சிகள் இயக்ககத்தின் மூலம் தெரிவித்துள்ள அறிவுரையின்படி வேலைகளை மேற்கொள்ள வேண்டும்.
18. பணிகளை துவங்கும் முன் மண் மாதிரிகளை எடுத்து பரிசோதனை செய்து அவை அங்கீகாரம் வழங்கப்பட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்ட இனங்களுக்கு ஏற்றவாறு உள்ளதா என்பதை உறுதி செய்யப்பட வேண்டும்.
19. பணிகளின் ஒவ்வொரு நிலைகளிலும் செயற்பொறியாளரின் சோதனை அளவு பெறப்பட வேண்டும்.
20. பணி மேற்கொள்வதற்கு முன் நிலையிலும், பணியின் ஒவ்வொரு கட்டத்திலும் புகைப்படங்கள் எடுத்து ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

21. கூடுதல் அளவு மேற்கொள்ளும் அவசியம் ஏற்பட்டால் செயற்பொறியாளரின் முன் ஒப்புதல் பெற வேண்டும்.
22. பணிக்கான ஒப்பந்த காலத்திற்குள் பணியினை ஒப்பந்தகாரர் மந்தமான முறையில் மிக மெதுவாக பணியில முன்னேற்றம் காண்பிக்கும் பட்சத்தில் (Penalty for Slow Progress) அபராதம் ஒப்பந்த மதிப்பில் 5% விதித்து பட்டியல் தொகையில் ஈடு செய்யப்பட வேண்டும்.
23. இறுதிப்பட்டியல் பணி முடிவறிக்கை (Completion Report ) ஒப்புதல் பெறப்பட்ட பின்னேரே இறுதிப்பட்டியல் தொகை ஒப்பந்தகாரருக்கு வழங்கப்படும்.
24. பணிகுறித்த விபரங்கள் அடங்கிய தரமான பலகைகள் 4 அடி X 2 1/2 அடி (1.20m X 0.75m) அளவில் ஏற்கனவே அறிவுறுத்தியவாறு வைக்கப்பட வேண்டும்.
25. பணிகள் மேற்கொள்ளவிற்கும் இடத்தினை பணி ஆரம்பிப்பதற்கு முன்னரும் பணி நடைபெறும் போதும் மற்றும் பணி முடிந்த பின்னரும் புகைப்படம் (Digital Photo ) எடுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டும். எடுக்கப்படும் மூன்று புகைப்படமும் ஒரே இடத்தை (Same Location) காட்டும்படி இருத்தல் வேண்டும்.
26. மேற்படி திட்டத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளும்போது ஒவ்வொரு நிலைகளிலும் பணியின் தரம் அரசுதொழில் நுட்பக்கல்லூரியில் ஆய்வு செய்து உறுதி செய்யப்பட வேண்டும்.
27. மேற்படி பிளாஸ்டிக் மற்றும் தார் பயன்படுத்திய அளவு மற்றும் பணியின் தரம் குறித்து ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியே அரசு அங்கீகாரம் பெற்ற ஆய்வு மையத்தில் ஆய்வறிக்கை பெறப்பட வேண்டும்.
28. ஒவ்வொரு பூங்கா கட்டுமான பணியிலும் (கைடுபோஸ்ட், சைன்போர்டு, ரிபௌக்டர்) அமைக்கப்பட வேண்டும்.
29. மதிப்பீட்டில் Concrete redimise வழிவகை செய்யப்பட்டிருப்பின் அதற்கான போக்குவரத்து அடர்த்தி (Traffic Density) தொடர்பான விபரம் மற்றும் Design உரிய அரசு பொறியியல் கல்லூரியில் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.
30. தரக்கட்டுப்பாடு உபகரணங்களை (Sieve, weighing balance, Camber board, Spirits with thread, Measuring Tap, Crow bar, Metric Gauge for metal stock measurement) வைத்திருக்க வேண்டும்.

(ஒ.ம்) டி.ஜி.எழிலரசன்,
**செயல் அலுவலர்,**
அச்சரபாக்கம் முதல்நிலை பேரூராட்சி,
செங்கல்பட்டு மாவட்டம்.

பெறுநர்,

1. பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்கள்,அச்சரபாக்கம் பேரூராட்சி

நகல்

1) பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் தகவலுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2) மாவட்ட ஆட்சித்தலைவர், செங்கல்பட்டு மாவட்டம் அவர்களின் தகவலுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3) மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்களின் மேலான தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
4) பேரூராட்சிகள் உதவி இயக்குநர், காஞ்சிபுரம் மண்டலம் அவர்களின் தகவலுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
5) உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள், காஞ்சிபுரம் மண்டலம் அவர்களின் தகவலுக்கு
6) இளநிலை பொறியாளர், அச்சரபாக்கம் பேரூராட்சி (இருப்பு) இடைக்கழிநாடு பேரூராட்சி,
7) தலைவர்,துணைத்தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள், அச்சரபாக்கம் பேரூராட்சி,
8) அலுவலக விளம்பர பலகைக்கு
9) கோப்புக்கு.